# துயர் துடைத்த கண்ணன்



வடமதுரை என்னும் மாநகருக்கு அருகில் அவந்தி எனும் ஓர் ஊர் உண்டு. அங்குள்ள அடர்ந்த மரங்களையுடைய மலைச்சாரலில் முனிவர்கள் சிறுகுடில்களை அமைத்து வாழ்ந்து வந்தனர். அம் முனிவர்களுள் சுதாமர் என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் தமது கிழிந்த ஆடைகளைத் தைத்தே எப்போதும் அணிந்து கொள்வதால் அவரைக் குசேலர் எனப் பெயரிட்டு அழைத்தனர்.

குருகுல முறையில் கல்வி கற்றுத் தேர்ந்த குசேலர் தவத்திலும் சிறந்து விளங்கினார். நற்குணங்கள், நற்செய்கைகள் நிரம்பிய சுசீலை என்னும் பெண்ணைத் திருமணம் செய்து இனிமையான இல்லறம் நடாத்தி வந்தார். அவர்களுக்கு இருபத்தேழு குழந்தைகள் இருந்தனர்.



பிள்ளைகள் வளர வளர வறுமையும் சேர்ந்தே வளர்ந்தது. உணவு போதாமையாற் குழந்தைகள் சோர்ந்து இருந்தனர். இத்தகைய கொடுமையான வறுமையிலும் குசேலர் பிறரிடம் எவ்வித உதவிகளையும் பெற விரும்பவில்லை. சுசீலை பிள்ளைகள் படும் துன்பங்களைக் கண்டு கண்ணீர் சொரிந்தாள்.

ஒருநாள் சுசீலை தன் கணவனிடம் சென்று 'சுவாமி எமது குடும்பத்தின் நிலையைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் உணவின்றி இருக்கலாம். எமது குழந்தைகள் உணவின்றித் தவிக்கலாமா? என்னால் இக் கொடுமையைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை' என்று துயரத்துடன் கூறினாள். குசேலர் சுசீலையைப் பார்த்து "சுசீலை, நான் வறுமையால் இறப்பினும் யாரிடமும் கையேந்தி நிற்க மாட்டேன்" என்று கூறினார். இதைக் கேட்ட சுசீலை "நீங்கள் யாரிடமும் கையேந்தி நிற்க வேண்டாம். தங்கள் பள்ளித் தோழனும் ஆருயிர் நண்பனுமான கண்ணனிடம் சென்று உதவி கேட்கலாமே" என்று கூறினாள். "நான் எவ்வாறு அவரிடம் போய் என் வறுமையைக் கூற முடியும்?" என்றார் குசேலர். "சுவாமி! கண்ணபிரான் எமது துயரைக்

கண்ணன் வாழும் அரண்மனை வாயிலை ஒருவாறு சென்றடைந்தார். வாயிற் காவலர்கள் குசேலரை உள்ளே விடவில்லை. அவரின் ஏழ்மையான தோற்றத்தைக் கண்டு அவரைப் 'பித்தன்' என நினைத்தனர். ஆனால் குசேலர் வாயிற் காவலரிடம் "எனது பெயர் குசேலர். யான் அவந்தி என்னும் ஊரிலிருந்து வருகிறேன். கண்ணன் எனது பள்ளித்தோழன்" என்று பணிவுடன் கூறினார். குசேலரின் பணிவைக் கண்ட வாயிற் காவலர் மனமிரங்கினர். அவர்கள் கண்ணனிடம் சென்று "அரசே, வணக்கம். அரண்மனை வாயிலில் தங்களின் நண்பர் என்று கூறிக்கொண்டு ஒருவர் நிற்கிறார். அவர் தன் பெயரைக் குசேலர் என்று கூறுகிறார்" என்றனர்.



இதைக் கேட்ட கன்ண்ன் மிகவும் மகிழ்ந்து, "விரைந்து சென்று அவரை அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார். ஏவலாளர்கள் ஓடோடிச் சென்று, குசேலரை அழைத்து வந்தனர். குசேலர் வருவதைக் கண்ட கண்ணன் ஓடிச் சென்று அவரை மார்போடு அணைத்துக் கொண்டார் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. குசேலரை அழைத்துச் சென்று, நீராடச் செய்து புதிய பட்டாடைகளை அணிவித்து, அறுசுவை உண்டி பரிமாறினார். தமக்களிக்கப்பட்ட அன்பான உபசரணையால் மிகவும்

மகிழ்ச்சியடைந்த குசேலர் தன் நண்பனின் உயர்ந்த குணங்களைக் கண்டு வியந்து போற்றினார். கண்ணன் குசேலரைப் பார்த்து "நண்பா, சுசீலை எனக்கு என்ன கொடுத்து அனுப்பினாள்?" என்று ஆவலுடன் கேட்டார். குசேலர், மனைவி கொடுத்த அவலை எவ்வாறு கொடுப்பது என நினைத்தார். கண்ணன் குசேலர் அணிந்து வந்த ஆடைகளை எடுத்தார். அதில் இருந்த முடிச்சை அவிழ்த்தார். ஒரு பிடி அவலை எடுத்து ஆவலோடு உண்டார். "ஆகா! என்ன சுவை" என்று வியந்தார். இதைக் கண்ட குசேலர் கண்ணனை அன்பொழுகப் பார்த்தார்.



குசேலர் தான் உதவி கேட்டு வந்த விடயத்தைக் கண்ணனிடம் கூறவில்லை. நண்பனிடம் விடைபெற்றுக் கொண்டு தம் ஊரை வந்தடைந்தார். அங்கு கண்ட காட்சிகளால் திகைப்புற்றார். குடிசைகள் இருந்த இடங்களே தெரியவில்லை. குடிசைகள் எல்லாம் மாடமாளிகைகளாகத் தோற்றமளித்தன. தமது வீட்டை நோக்கி நடந்தார். என்ன ஆச்சரியம்! அவரது குடிசையும் மாடமாளிகையாயிருந்தது. குசேலரின் குழந்தைச் செல்வங்கள் மிகவும் ஆனந்தத்தோடு விளையாடிக் கொண்டிருந்தன.